பக்கங்கள் 21

# காலை முரசு

## உலகப் பொருளாதார மாநாட்டில் ஹரிணி!

### சுவிட்சர்லாந்து பறக்கின்றார்



உலகப் பொருளாதார மன்றத்தின் மாநாடு எதிர்வரும் 19ஆம் திகதி சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் 03 ▶

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | மார்கழி 30 புதன்கிழமை 14.01.2026 | அதிர்வு 167

# மக்கள் ஆணைக்கு மதிப்பளித்து நாட்டைத் திறம்பட ஆளுவீர்கள்!

## விடைபெறும் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சாங் ஜனாதிபதியிடம் நம்பிக்கையுடன் தெரிவிப்பு



“நாட்டு மக்கள் விரும்பிய தலைவராக நீங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள். எனவே, மக்கள் ஆணைக்கு மதிப்பளித்து நாட்டைத் திறம்பட ஆட்சி செய்வீர்கள் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது.” - என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சாங், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் நேரில் தெரிவித்தார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக தனது இராஜதந்திர சேவையை நிறைவு செய்து, இம்மாதம் 16ஆம் திகதி நாட்டிலிருந்து புறப்படவுள்ள ஜூலி சாங், நேற்றுமுன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியைச் சந்தித்தார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தச் சந்திப்பின்போது, தனது பதவிக்காலத்தில் அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்காக ஜூலி சாங் மேற்கொண்ட தொடர்ச்சியான முயற்சிகளை ஜனாதிபதி பாராட்டினார். 03 ▶

### ராஜபக்ஷ ஆட்சிக்கு ‘இராஜதந்திர தலையிடி’ கொடுத்த

## ஜூலி சாங்குடன் மஹிந்த சந்திப்பு

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சாங்குக்கும் இடையில் நேற்று சந்திப்பு நடைபெற்றது.

கடந்த 4 வருடங்களாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராகச் செயற்படும் ஜூலி சாங், எதிர்வரும் 16 ஆம் திகதி தாயகம் திரும்புகின்றார்.

தனது இராஜதந்திரப் பணியை முடித்துக்கொண்டு திரும்பும் அவர், 03 ▶






இலங்கையின் யுத்த கால வரலாற்றுச் சமயத்தில் பாதுகாப்புத் துறை தொடர்பான செய்திகளையும் தகவல்களையும் வெளியிடுவதில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஊடக ஜாம்பவானாகத் திகழ்ந்த இக்பால் அத்தாஸ் மறைந்து விட்டார்.

சுமார் ஆறு தசாப்த காலம் இலங்கையில் ஊடகப் பணியாற்றிய அவரை, ஓர் ஊடகப் பரம்பரையை உருவாக்கிய சற்குரு என்று கூறலாம்.

அவரின் கீழ் நான் பணியாற்றாவிட்டாலும், அவருக்குப் பக்கத்திலிருந்து பலவற்றைப் பார்த்துப் படித்துப் பட்டறிந்து கொள்ள வாய்ப்புப் பெற்றவன்.

1979இல் 19 வயது இளைஞனாக வெறும் பேனாவோடு ‘தினபதி’, ‘சிந்தாமணி’ என்ற வாண்மைக் களத்தில் ஊடகச் செய்தியாளனாக நான் இணைந்த போது, 02 ▶

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**இரகசியம் பரகசியம்...**

அந்தப் பத்திரிகைகளின் ஆங்கிலச் சகோதர வெளியீடுகளான 'சன்' நாளிதழ், 'வீக்கென்ட்' வார இதழ் ஆகியவற்றின் செய்தி ஆசிரியராக சுயாதீன பத்திரிகா சமாஜத்தில் அவர் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

தலைநகர் கொழும்பில் சிங்களமும் தெரியாமல், ஆங்கிலமும் புரியாமல், இரண்டும் கெட்டான் விடலை வயதில் ஒரு செய்தியாளனாக நான் இணைந்த போது மும்மொழி வல்லாளரான அத்தாஸ், இளைஞனான என்னையும் அரவணைத்து வழிபடுத்தத் தவறவில்லை.

நீதிமன்றங்களில் இருந்து தமிழில் நான் எடுத்து வரும் செய்திகளை பல சமயங்களில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, எனது பெயரோடு செய்தியாக 'சன்' பத்திரிகையில் பிரசுரித்தவர் அவர். ஆங்கிலமே சரிவரத் தெரியாமல் ஆங்கிலப் பத்திரிகைக்கும் செய்தி எழுதிய 'பெருமையை' அந்தப் பெரியவர் மூலம் அந்த வயதிலேயே நான் சம்பாதித்துக் கொண்டேன்.

அந்த நேரத்தில் 'சன்' ஆசிரியர் ரெக்ஸ் டீ சில்வா, 'வீக்கென்ட்' ஆசிரியர் சிங்க ரணதுங்க, செய்தி ஆசிரியர் இக்பால் அத்தாஸ், அந்த ஆசிரிய பீடத்தில் இருந்த ரணில் வீரசிங்க, லலித் அழகக்கோன், அர்ஜுனா ரணவாணா, கென்னத் உட்பட எல்லோரும் ஒருவரை ஒருவர் பதவி நிலை குறிப்பிட்டோ அல்லது 'ஸேர்' என்று குறிப்பிட்டோ அழைப்பதில்லை. பெயர் சொல்லியே ஒருவரை ஒருவர் அழைப்பார்கள். செய்தியாளர்கள் கூட செய்தி ஆசிரியரை பெயர் சொல்லி கூப்பிடுகின்ற தாராளப் போக்கு 'சன்' ஆசிரியர் பீடத்தில் இருந்தது.

'தினபதி','சிந்தாமணி' ஆசிரிய பீடத்தில் நிலைமை வேறு. ஊடக ஜாம்பவான்களான எஸ்.டி.சிவநாயகம், கே.கே.இரத்தினசிங்கம், கானமயிலநாதன் போன்றோரை நாங்கள் என்றும் பெயர் குறிப்பிட்டு அழைத்தவர்கள் அல்லர்.

எனக்கு என்னவோ என்னிலும் விட 15 வயது மூத்தவரான இக்பால் அத்தாஸை – எடுப்பான தோற்றத்தோடு பாடசாலை அதிபர் போல கனகச்சிதமாக உடையணிந்து வருகின்ற – அவரை பேர் சொல்லி அழைக்கத் தோன்றவில்லை. கனிவோடு மென்மையான குரலில் பேசும் அவரைப் பெரும்பாலும் நான் 'ஸேர்' என்று அழைப்பேன். அப்படித் தம்மை அழைப்பது தமக்கு பிடிக்கவில்லை என்பதை அவர் நாசூக்காகச் சுட்டிக்காட்டுவார். "அத்தாஸ் என்றே நீங்கள் என்னை அழைக்கலாம்" என்பார். நான் சிரித்து விட்டுப் போய் விடுவேன்.

பிற்காலத்திலே 'உதயன்', 'சுடர் ஒளி' இரண்டுக்கும் ஆசிரியராக நான் இருந்த சமயங்களில் பல தடவைகள் வெளிப்படையாகவே எனக்கு இந்த விடயத்தை அவர் சுட்டிக் காட்டி இருக்கிறார்.

"நீங்கள் மரியாதைக்குரிய இரண்டு பத்திரிகைகளின் ஆசிரியர். நானும் ஊடக பரப்பிலிருந்தாலும் என்னை நீங்கள் 'ஸேர்' என்று அழைப்பது பொருத்தமற்றது." – என்று அவர் சில தடவைகள் எனக்கு வெளிப்படையாக கூறியிருக்கின்றார். ஆனால் அவர் மீதான மரியாதை கருதி, அவர் நம்மை விட்டுப் பிரியும் வரை தொலைபேசியில் என்றாலும், நேரில் என்றாலும் அவரை 'ஸேர்' என்று அழைப்பதில் இருந்து நான் என்றும் விலகியவன் அல்லன். அப்படி அழைப்பதற்கான முழு தகுதி நிலையும், பழக்க வழக்கங்களும் பண்பும் கொண்டவர் அவர்.

என்ன காரணம் கொண்டும் நமது செய்தி மூலத்தை எந்த நெருக்கடி வந்தாலும் காட்டிக் கொடுக்கவே கூடாது. அதுவே ஊடக தர்மமும் சட்டமும் என்ற நியதியை எங்களில் பலருக்கு சொல்லாமல் சொல்லித் தந்த ஊடக மறை நூல் அவர்.

அவருக்கு நான் நண்பர் என்பது புலிகள் மத்தியில் எனக்கு ஒரு மரியாதை தந்தது. புலிகளோடு நான் மிக நெருக்கமான ஊடகவியலாளன் என்ற நிலைமை அத்தாஸிடம் எனக்கு மரியாதையைப் பெற்று தந்தது.

யுத்த காலத்தில் தென்னிலங்கையில் இருந்து செய்திகளை வெளியிட்ட அவர் குறித்து தமிழ் ஊடகப் பரப்புக்குத் திருப்தி இல்லாவிடிலும் கூட, ஒரு பாதுகாப்புத்துறை செய்தியாளனாக அவரது பணி மெச்சத்தக்கது.

அவரைப் பற்றி எழுதுவதானால் நீண்ட பல அத்தியாயங்கள் எழுதலாம். அவ்வளவு தூரம் எங்களுக்குள் ஊடாட்டமும் நெருக்கமும் உண்டு. ஆயினும் அவர் வெளியிட்ட ஒரு செய்தி பற்றிய தகவலை சொல்லி இன்றைய பத்தியை முடிக்கலாம் என்று நினைக்கிறேன்.

1997 நடுப்பகுதியை ஒட்டிய காலத்தில் நடந்த சம்பவம் இது. அப்போது யாழ்குடா நாட்டை இராணுவம் புலிகளிடமிருந்து மீட்டெடுத்திருந்தது. அங்கிருந்து 'உதயன்' பத்திரிகையை வெளியிட்டுக் கொண்டிருந்தோம். பெரும்பாலும் பாதுகாப்புத் துறை செய்திகளை அத்தாஸை மேற்கோள்காட்டி நாங்கள் வெளியிடுவது வழமை.

அப்படி ஒரு செய்தியை வெளியிட்ட நினைவுண்டு.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை தீவிரப்படுத்த முடிவெடுத்த சந்திரிகா அரசு அதற்காக புதிய ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்தது. அதன் ஒரு கட்டமாக 'ஸிம்பாப்வே டிபன்ஸ் இண்டஸ்ட்ரீஸ்' நிறுவனத்திடம் இருந்து 32,400 எண்ணிக்கையான 81 எம்.எம். மோட்டார் ஷெல்களை வாங்க இலங்கை முடிவெடுத்தது. அந்த ஆயுதக் கொள்வனவுக்கான ஓடர் வழங்கப்பட்ட போது அதன் அரைவாசித் தொகையை இலங்கை வழங்கும் என்றும், முழு ஷெல்களும் விநியோகிக்கப்பட்டு முடிக்கப்பட்டதும், எஞ்சிய பணம் இலங்கைத் தரப்பால் வழங்கப்படும் என்றும் இணக்கம் காணப்பட்டது. ஷெல்கள் தயாரான சமயம் இலங்கையில் இருந்து மேஜர் ஜெனரல் தர நிலை அதிகாரி ஒருவர் தலைமையில் உயர்மட்ட குழு ஒன்று நேரடியாக ஸிம்பாப்வேயிற்கு விஜயம் செய்து, அந்த ஷெல்களை ஏவி, பயன்படுத்தி, தர நிர்ணய அளவீடுகளையும் உறுதிப்படுத்திக் கொண்டது. ஷெல்கள் தயாரானதும் அவற்றை ஏற்றி அனுப்புவதற்கான கப்பல் சேவையை பெறுவதற்கு கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டன. அதன் அடிப்படையில் ஒரு நிறுவனத்துக்கு அந்தப் பணி வழங்கப்பட்டது. ஷெல்களுடன் ஸிம்பாப்வேயிலிருந்து புறப்பட்ட கப்பல் வழியில் மடகஸ்காரில் தரித்துப் புறப்பட்டது. ஆனால் அது கொழும்புக்கு வந்து சேரவேயில்லை. மாயமாகிவிட்டது.

இந்தத் தகவலை முதன் முதலில் 'சண்டே டைம்ஸ்' வார இதழ் – பாதுகாப்புக் கட்டுரையில்' முதலில் வெளியிட்டவர் இக்பால் அத்தாஸ்தான்.

அது மாத்திரமல்ல, குறைந்த விலையில் கப்பல் கட்டண அடிப்படையில் கேள்விப்பத்திரம் சமர்ப்பித்தது புலிகளின் பினாமி நிறுவனம்தான் என்று குறிப்பிட்டு, இக்காலத்தில் கப்பல் வரவில்லை, வரவில்லை என்று வழிமேல் விழி வைத்து இலங்கை அதிகாரிகள் காத்திருக்க, அந்தக் கப்பலோ முல்லைத் தீவில் 32,400 தொகையான 81 எம். எம். மோட்டார் ஷெல்களையும் புலிகள் வசம் இறக்கிவிட்டுச் சென்றுவிட்டதான தகவலை இக்பால் அத்தாஸ் அம்பலப்படுத்தினார்.

இலங்கை அரசின் பணத்தில், அவர்கள் கொடுத்த ஓடரைப் பயன்படுத்தி, அவர்களே போய் நேரடியாக தர நிர்ணயத்தைப் பரிசோதித்துத் தயார் படுத்திய நிலையில், அதனை அப்படியே புலிகள் கபளீகரம் செய்து கொண்டார்கள் என்ற செய்தி அத்தாஸ் மூலம் வெளியானமை, கொழும்புப் பாதுகாப்பு வட்டாரங்களைப் பெரும் சீற்றத்தில் ஆழ்ந்தன.

அப்படிப் புலிகள் ஏவிய மோட்டார்களை எதிர்கொள்ள முடியாமல் ஆனையிறவுத் தாக்குதலின் போது படைத்தளத்தை விட்டோடிய படையினர், 'புலிகள் ஷெல்களை மாரி மழை போலப் பொழிகின்றார்கள்' என்று குளறினர்.

படையினர் தயாரித்த ஷெல்களை வைத்துப் படையினரை பதம் பார்த்த புலிகளின் சாதுரியத்தை கொழும்பிலிருந்து கொண்டு சாதுரியமாக வெளியிட்டவர் இக்பால் அத்தாஸ்.

பாதுகாப்புச் செய்திகளை வெளியிடும் அவரின் போக்குக்குறித்து புலிகளுக்கு விமர்சனங்கள் இருந்தாலும் அவரின் செய்தி ஊடகத் திறமையை புலிகளின் தலைவர்களும் மதித்தார்கள் என்பதை நான் நன்கு அறிவேன்.

ஓரிரு வருடங்களுக்கு முன்னர் அவரைச் சந்தித்தபோது ஒரு விடயத்தை அவர் எனக்குச் சொன்னார்.

நாட்டின் தலைவராக இருந்த ஒருவரைப் பேட்டி காண்பதற்காக சென்றிருந்தேன். பேட்டியின் முடிவில் ஒரு மொத்த என்வலப்பை எனக்கு நீட்டினார் அவர். அதில் பெருந்தொகை நோட்டுகள் இருக்கின்றன என்பதை நான் புரிந்து கொண்டேன். நாட்டின் தலைவரான அந்த அதி உத்தமரைப் பார்த்து, 'இதனை ஏற்றுக்கொள்ளும் அற்ப பத்திரிகையாளன் நான் அல்லன்' – என்று சிரித்துக் கொண்டு கூறிவிட்டு வந்து விட்டேன் என்றார் அவர்.

அவரிடம் ஊடகவியலாளராக நாங்கள் கற்றுக் கொள்ள வேண்டிய பல பாடங்கள் இருக்கின்றன.

அந்தக் காலத்தில் சபாரி உடுப்போடு, கம்பீரமான இளைஞராக நான் கண்ட இக்பால் அத்தாஸை நேற்று ஒடுங்கிய முகம் மாத்திரம் தெரியும் மிக மெலிந்த உருவமாக, மீளாத் துயில் கொண்டிருந்த நிலையில் பார்த்து அஞ்சலித்தேன்.

இன்றும் கூட அவர் எனக்கு 'ஸேர்' தான்.

"போய் வாருங்கள் 'ஸேர்'! உங்கள் நினைவும் ஊடகத்துறை வழிகாட்டலும் எங்களை என்றும் நல்வழிப்படுத்தும்...!"

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**ஜூலி சாங்குடன்...**

கடந்த சில நாட்களாக முக்கியத்துவ மிக்க சந்திப்புகளைக் கொழும்பில் நடத்தி வருகின்றார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை நேற்றுமுன்தினம் சந்தித்திருந்தார்.

இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் அவர் நேற்று பேச்சு நடத்தினார்.

இதன்போது, "அமெரிக்க – இலங்கை கூட்டாண்மை குறித்து விவாதித்தோம்." – என்று அமெரிக்கத் தூதுவர் தெரிவித்தார்.

இலங்கையில் இடம்பெற்ற மக்கள் புரட்சியின்போது (அரகலய) ஜூலி சாங் தான் அமெரிக்கத் தூதுவராகச் செயற்பட்டார்.

அப்போது கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகவும், மஹிந்த ராஜபக்ஷ பிரதமராகவும் பதவி வகித்தனர்.

அரகலயவின் பின்னணியில் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சாங்கும் இருந்தார் என மஹிந்தவின் சகாக்கள் குற்றஞ்சாட்டி இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலப்பகுதியில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடர் மற்றும் சர்வதேச களத்தில் அமெரிக்கா கடும் இராஜதந்திர அழுத்தங்களைப் பிரயோகித்திருந்தது.

மறுபுறத்தில் பஸில் ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோருக்கு அமெரிக்கக் குடியுரிமை இருந்தது. ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவதற்காக அமெரிக்கக் குடியுரிமையை கோட்டாபய ராஜபக்ஷ துறந்தார் என்பது தெரிந்ததே.













**மக்கள் ஆணைக்கு...**

மேலும், 'டித்வா' சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு துரித நிவாரணம் வழங்குவதற்காக அமெரிக்காவுடன் இணைந்து அவர் வழங்கிய பங்களிப்புக்கு ஜனாதிபதி தனது நன்றியைத் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் போது அவர் வழங்கிய விசேட ஆதரவுக்கும் ஜனாதிபதி பாராட்டுத் தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராகப் பதவியேற்ற ஜூலி சாங், அமெரிக்கா – இலங்கை இராஜதந்திர உறவுகளின் 75ஆவது ஆண்டு நிறைவு உள்ளிட்ட பல முக்கிய மைல்கற்களில் தனது தலைமைத்துவத்தை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**உலகப் பொருளாதார...**

ஆரம்பமாகி, 23ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்த உயர்மட்ட சர்வதேச மாநாட்டில் இலங்கை சார்பில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய பங்கேற்கவுள்ளார்.

பிரதமருடன் இணைந்து பிரதி நிதி அமைச்சர் அனில்ஜெயந்த பெர்னாண்டோவும், வெளிவிவகார அமைச்சின் மூத்த அதிகாரிகளும் அங்கு செல்லவுள்ளனர்.

இந்த விஜயத்தின் போது, பிரதமர் ஹரிணி அமரசூரிய உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அரசுத் தலைவர்கள், கொள்கை நிர்ணயாளர்கள் மற்றும் முதலீட்டாளர்களுடன் இருதரப்பு சந்திப்புகளை நடத்தவுள்ளார்.

இலங்கையில் முதலீட்டு வாய்ப்புகளை விரிவுபடுத்துவது, வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஈர்ப்பது மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிப்பதற்கான நடைமுறை வழிகள் குறித்து அவர் விசேட கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளார்.

உலகின் அரசியல், பொருளாதார திசைகளை தீர்மானிக்கும் முக்கிய மேடையாகக் கருதப்படும் டாவோஸ் மாநாட்டில் இலங்கைப் பிரதமரின் பங்கேற்பு, நாட்டின் பொருளாதார மீட்சி முயற்சிகளுக்கு சர்வதேச கவனத்தை மேலும் ஈர்க்கும் என அரசியல் மற்றும் பொருளாதார வட்டாரங்கள் மதிப்பிடுகின்றன.




# வலிகாமம் வடக்கில் தொடரும் இராணுவ ஆக்கிரமிப்பு 2,500 ஏக்கர் காணிகள் இன்னும் விடுவிக்கப்படவில்லை

## தவிசாளர் சுகிர்தன் சுட்டிக்காட்டு

(எஸ்.நிதர்ஷன்)

"வலிகாமம் வடக்குப் பகுதியில் மட்டும் 2 ஆயிரத்து 500 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. இராணுவத்தால் பயன்படுத்தப்படாத காணிகள்கூட தொடர்ந்தும் ஆக்கிரமிப்பில் உள்ளன."

– இவ்வாறு வலிகாமம் வடக்கு பிரதேசசபை தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசு காணி விடுவிப்பு தொடர்பில் வாக்குறுதிகளை வழங்குகின்ற போதிலும், அந்த வாக்குறுதிகளுக்கு அமைய செயற்படுவதில்லை. குறிப்பாக வலிகாமம் வடக்கில் மட்டும் 2 ஆயிரத்து 500 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. இவற்றில் பலாலி மேற்கு, பலாலி வடமேற்கு, மயிலிட்டித்துறை தெற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகள் முற்றாக விடுவிக்கப்பட வேண்டிய நிலைமையே உள்ளது.

இந்தக் காணிகளை விடுவிக்க வேண்டும். பல காணிகள் இராணுவத்தினர் பயன்படுத்தாமல் பற்றைகள் மண்டிக் காணப்படுகின்றன.

அதேபோன்று பலாலி கிழக்குப் பகுதியில் கிட்டத்தட்ட 600 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் தேவையற்ற வகையில் உயர்பாதுகாப்பு நிலங்களாக உள்ளன. அதே இடங்களில் வயாவிளான் சந்தியை அண்மித்த மானம்பிராய் ஆலயத்தோடு இணைந்த 3 ஆலயங்களுக்கு உரிய காணிகளை ஏற்கனவே விடுவிக்க சம்மதம் தெரிவிக்கப்பட்ட போதிலும், இன்னமும் விடுவிப்புச் சாத்தியமாகவில்லை.

அதேபோன்று குரும்பசிட்டி, கட்டுவன் பகுதிகளில், இராணுவத்தின் விவசாய நடவடிக்கைகளுக்காக காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. சுமார் 35 ஆண்டுகளுக்கு மேலாக இந்தக் காணிவிடுவிப்புக்காக மக்கள் காத்திருக்கிறார்கள். 1990 ஜூன் மாதம் இடம்பெயர்ந்து சென்ற அவர்களால், இன்றளவும் தமது நிலங்களுக்குத் திரும்பமுடியாத நிலை காணப்படுகின்றது.

அத்துடன், பலாலி வீதி இரவு 7 மணிவரையே அனுமதிக்கப்படுகின்றது. அதை 24 மணிநேரமும் பயன்படுத்துவதற்கு ஏற்றவாறு விடுவிக்க வேண்டும். அதேபோன்று வயாவிளான் சந்தியிலிருந்து கட்டுவன் சந்தி வரையில் தெல்லிப்பழை மருத்துவமனைக்குச் செல்வதற்கான பாதை 35 ஆண்டுகளுக்கும் மேலாக விடுவிக்கப்படாமல் உள்ளது." – என்றார்.

### அநுர அரசிலும் தொடர்கின்றது அடாவடி

# எழுவைதீவில் தனியார் காணிகள் கடற்படையினருக்குச் சுவீகரிப்பு!

### ஜனவரி 20ஆம் திகதி அளவீடு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் – எழுவைதீவில், தனியாருக்குச் சொந்தமான காணிகளை கடற்படையின் தேவைக்காக சுவீகரிப்பதற்கு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இதற்கான அளவீட்டுப் பணிகள் எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ளது.

எழுவைதீவில் ஜே/39 கிராம அலுவலர் பிரிவில் தனியார் ஒருவருக்குச் சொந்தமான 2 பரப்புக் காணியையும், அதேபோல் மூன்றாம் வட்டாரத்தில் தனியார் ஒருவருக்குச் சொந்தமான 53 பேர்ச் காணியையுமே கடற்படையினரின் தேவைக்காக அபகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்கான அளவீட்டுப் பணிகள் எதிர்வரும் 20ஆம், 21ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன என்றும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.



இந்தக் காணிகளை அபகரிப்பதற்கு, கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. எனினும், மக்களும் தமிழ்க் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகளும் வெளிப்படுத்திய எதிர்ப்பால் அந்தப் பணிகள் கைவிடப்பட்டிருந்தன.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாளை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து, பொங்கல் பண்டிகைகளில் கலந்து கொள்ளவுள்ளார். இதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்றுவரும் நிலையிலேயே, காணி சுவீகரிப்பு முயற்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மீளெழுச்சிக்கு இடமுண்டா?

வரலாற்றின் குப்பைக் கூடைக்குள் தூக்கிக் கடாக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மீண்டெழுந்து வர முடியுமா என்பது கேள்விக்குறியே. தங்களுடைய செல்வாக்கையும் முக்கியத்துவத்தையும் அதிகாரத்தையும் இழந்து போன வரலாற்றுப் பழம் பெரும் கட்சிகள் மீண்டும் முன்னிலைக்கு வருவது பெரும்பாலும் சாத்தியமே இல்லை.

சுதந்திர இலங்கையில் மாறி மாறி அதிகாரத்துக்கு வந்த பிரதான கட்சிகள் ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திர கட்சியும். இரண்டுமே இன்று ‘கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக’ - ‘உலக்கை தேய்ந்து உளிப்பிடியானமை போல’ - சுருண்டு போய்க் கிடக்கின்றன. ஆயினும் அக்கட்சிகளை நிர்வகிக்கின்ற தலைவர்கள் தங்கள் கட்சிகள் மீளெழுச்சி பெறும் என்று மீண்டும் மீண்டும் கதை விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழர் தரப்பிலும் ஒரு காலத்தில் கொடி கட்டிப் பறந்த - தமிழர்களின் தனித் தமிழீழ ஆணையைத் தமிழர் தேசத்தில் தனித்துவமாகப் பெற்றுக் கொண்ட - தமிழர் விடுதலைக் கூட்டணியும் அதன் உதயசூரியன் சின்னமும் தனி மனிதரான ஆனந்தசங்கரியினால் முடக்கப்பட்ட நிலையில் அதன் முக்கியத்துவத்தையும் தமிழர்கள் மத்தியிலான செல்வாக்கையும் அடியோடு இழந்து, சேடமிழுக்கும் கட்சியாக அது மாறிவிட்டது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை பல்வேறு இழுபறிகளுக்கு பின்னர் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள முன்னாள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தமது கட்சி அடுத்தடுத்து நீதிமன்ற வழக்குகளில் சிக்குண்ட காரணத்தினால் செயல்பட முடியாமல் போய் விட்டது என்றும், இப்போது அந்த விடயங்களில் இருந்து விடுபட்டு அது மீண்டெழுந்து வருவதாகவும் கூறுகிறார். கட்சிக்கு எதிரான 18 வழக்குகளில் 17 வழக்குகள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு விட்டன. செயலாளராக இருந்த தயாசிறி ஜெயசேகரவை அப்பதவியில் இருந்து முன்னர் தலைவராக இருந்த மைத்திரிபாலசிறிசேனவிலக்கியமை தொடர்பான வழக்கு மாத்திரமே இன்னும் நீடிப்பதாக அவர் கூறுகிறார்.

வழக்குகளில் இருந்து கட்சி மீண்டும் விட்டமையால் மீண்டும் கட்சி பழைய நிலைமைக்கு உயரும் என்று அவர் நம்பிக்கை தெரிவிக்கின்றார்.

1977 முதல் 1994 வரை முடங்கிக் கிடந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பின்னர் மீண்டும் அதிகாரத்துக்கு வந்து 2015 வரை 20 ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து கோலோச்சியமை போல மீண்டும் அக்கட்சி புதிய எழுச்சி பெறும் என்று அதன் தலைவர் நிமால் சிறிபால டி சில்வாவும், அக்கட்சியின் புதிய தேசிய அமைப்பாளராக நியமனம் பெற்றிருக்கும் சாமர சம்பத் தஸநாயக்க எம்.பியும் கூறுகின்றனர்.

ஆனால் இப்போதைய அரசியல் செல்நெறிப் போக்கை அவதானிக்கும் போது, சுதந்திரக் கட்சியோ, ஐக்கிய தேசியக் கட்சியோ மிக அண்மைக்காலத்தில் எழுச்சி பெறும் அரசியல் சாத்தியம் தென்படவில்லை. அத்தகைய நிலைக்கு அக்கட்சிகளை உயர்த்தக்கூடிய தனித்துவச் செல்வாக்கு மிக்க தலைவர்கள் அக்கட்சிகளில் இருக்கின்றார்களா என்பதும் தெரியவில்லை.

சுதந்திரக் கட்சியோ, ஐக்கிய தேசியக் கட்சியோ குறுகிய காலத்தில் மீண்டும் மீளெழுச்சி பெற்று வரும் என்று நம்புவதற்கு இன்றைய நிலையில் இடமில்லை என்பதுதான் உண்மை.

# துணிகர ஊடகவியலாளர் மறைந்த இக்பால் அத்தாஸ்

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் தெரிவிப்பு

பாதுகாப்பு மற்றும் அரசியல் விவகாரங்களில் அச்சமின்றி துணிச்சலுடனும், தன்னம்பிக்கையுடனும் எழுதிய சிறப்பான ஊடகவியலாளராக இக்பால் அத்தாஸ் திகழ்ந்தார் என அவரது மறைவையிட்டு வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

அவரது இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

எனது நண்பரும், புகழ்பெற்ற ஊடகவியலாளரும், "சண்டே டைம்ஸ்" வார இதழின் முன்னாள் பாதுகாப்பு விவகாரப் பத்தி எழுத்தாளரும், ஆலோசக ஆசிரியருமான இக்பால் அத்தாஸ் காலமான செய்தியை அறிந்து மிகவும் கவலையடைந்தேன்.

அத்துடன், அவர் ஜேம்ஸ் டிபென்ஸ் வீக்லி, சி.என்.என். மற்றும் டைம்ஸ் ஒவ் லண்டன் ஆகியவற்றிற்கும் பங்களிப்பு செய்திருக்கின்றார்.

இக்பால் அத்தாஸ் உயிர் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில், பாதுகாப்பு மற்றும் அரசியல் விவகாரங்களில் துணிச்சலுடனும் தன்னம்பிக்கையுடனும் எழுதிய தலை சிறந்த ஊடகவியலாளராக மதிக்கப்படுகிறார். குறிப்பாக, 30



ஆண்டுகள் நீடித்த உள்நாட்டு யுத்த காலத்தில் அவர் வழங்கிய போர்முனைச் செய்திகள் விறுவிறுப்பானவை. அவரது பல்வேறு சிறப்புச் செய்திகளும் அவை மீதான அன்னாரின் ஆழமான பார்வையும் வாசகர்களை அறிவூட்டின.

அவர் தனது ஊடகப் பணியை 1980 ளில் "தவச" குழுமத்தின் தமிழ் வார இதழான "சிந்தாமணி" மற்றும் "சன்" பத்திரிகையில் செய்தியாளராக ஆரம்பித்தார். பொதுநலனை முதன்மையாகக் கொண்டு, தேவையான சுய கட்டுப்பாடுகள் மற்றும் சமநிலை என்பவற்றைப் பேணி, அர்ப்பணிப்பு, திட உறுதி மற்றும் பொறுப்புணர்வுடன் அவர் எழுதி வந்தார்.

அவருக்கும், எனக்கும் இடையிலான கருத்துப் பரிமாற்றங்கள் எப்போதும் சுவாரஸ்யமாகவும் அறிவுபூர்வமாகவும் இருந்தன. அவர் எளிதில் அணுகக்கூடியவராகவும், சக ஊடகவியலாளர்களின் கருத்துகளுக்கு எப்போதும் செவிசாய்ப்பவராகவும் இருந்தார்.

ஜனநாயகத்தின் நான்காவது தூணாகிய பத்திரிகைத்துறைக்காக அவர் கடைப்பிடித்த உயர்ந்த தரச் சிறப்புக்கும், அவர் காட்டிய துணிச்சலுக்கும் நன்றி தெரிவித்து, மரியாதை செலுத்துவது எமது கடமையாகும்.

அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், ஊடக நண்பர்களுக்கும் எனதும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினதும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அல்லாஹ் அன்னாருக்கு ஜன்னதுல் பிர்தௌஸுல் அஃலா என்ற உன்னதமான சுவன பாக்கியத்தை அளிப்பானாக.

"இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்".

"நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள் நிச்சயமாக அவரிடமே நாம் மீண்டும் திரும்புவோம்".





# சித்த, ஆயுர்வேத வைத்தியர்களுக்கு உரியநியமனங்களைவழங்குங்கள்!

## பிரதமரிடம் நேரில் வலியுறுத்து

(அபு அலா)

இலங்கைப் பல்கலைக் கழகங்களில் பட்டம் பெற்ற, வேலையில்லாத ஆயுர்வேத வைத்தியர் சங்கம் மற்றும் அரச வேலைவாய்ப்பினை எதிர்பார்க்கும் சித்த வைத்தியர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கும், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்குமிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் அலரி மாளிகையில் இடம்பெற்றது.



இதில் சித்த, யுனானி மற்றும் ஆயுர்வேத வைத்தியர்கள் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். இதன்போது, இலங்கை பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்று, அரச வேலைவாய்ப்பு இல்லாமல் பல வருடங்களாகத் தொழிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் வைத்தியர்களுக்கான வேலையை வழங்கும் நடவடிக்கையை எடுக்குமாறு சந்திப்பின் போது பிரதமர் ஹரிணி அமரசூரியவிடம் வலியுறுத்தப்பட்டது.



# துணுக்காய் ஒளிரும்வாழ்வு அமைப்பினரை நேற்றுச் சந்தித்தார் சத்தியலிங்கம் எம்.பி.





முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் ஒளிரும் வாழ்வு அமைப்பினரை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் இன்று நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது ஒளிரும் வாழ்வு அமைப்பினால் இதுவரை காலமும் மேற்கொள்ளப்பட்டுவரும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் அமைப்பினரால் விளக்கமளிக்கப்பட்டது. அத்துடன் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய வேலைத்திட்டங்கள் பற்றியும் அமைப்பின் தேவைப்பாடுகள் மற்றும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினருக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

மாற்றுத்திறனாளிகளின் வளமான எதிர்காலத்திற்காக விசேடமாக உருவாக்கப்பட்டு செயற்பட்டுவரும் இந்த அமைப்பின் தேவைப்பாடுகளை உரிய தரப்பினரின் கவனத்திற்கு கொண்டுசென்று தீர்ப்பதற்குத் தாம் நிச்சயம் நடவடிக்கை எடுப்பார் என நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் இதன்போது தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் அமைப்பின் முகாமைத்துவ பணிப்பாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான திருமதி. சாந்தி ஸ்ரீஸ்காந்தராசா, ஒளிரும்வாழ்வு அமைப்பின் தலைவர், நிர்வாக உறுப்பினர்கள், பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.





# வட.,கிழக்கில் இந்துமதம் புறக்கணிக்கப்பட்டு பௌத்த மேலாதிக்கம் திணிக்கப்படுகின்றது!

## தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி விசனம்

இலங்கையில் தமிழ்மக்கள் பூர்வீக குடிகளாவர். விஜயன் இலங்கைக்கு வரும்போது இங்கு தமிழர்கள் வாழ்ந்தமைக்கான அடையாளங்களாக பல விடயங்களை குறிப்பிடலாம் என தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் திருகோணமலை மாவட்டச் செயலாளர் சின்னமோகன் தனது ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில் –

திருகோணமலையில் அமைந்துள்ள திருக்கோணேஸ்வரம், கன்னியா வெந்நீர் ஊற்று ஆகியன விஜயன் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் இருந்தன என வரலாறுகள் கூறுகின்றன.

ஆனால் இன்று இந்து மதம் பற்றிய விடயங்கள் புறக்கணிக்கப்பட்டு பௌத்த மேலாதிக்கம் வடக்கு,கிழக்கில் திணிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் இந்துசமய கலாசார அமைச்சு உருவாக்கப்பட்டு அதற்கான அமைச்சர் கூட நியமிக்கப்பட்டு இந்து மத சமய விடயங்கள் தனித்துவமாகப் பேணப்பட்டன.

ஆனால் இன்று பௌத்த கலாசார அமைச்சுக்குள் இந்துசமய விடயங்கள் கவனிக்கப்படுகின்றன. இந்த விடயங்கள் மாற்றப்பட்டு இந்து கலாசார பிரிவுக்கு தனியான அமைச்சு உருவாக்கப்பட்டு அமைச்சர் நியமிக்கப்பட வேண்டும்.

இன்றைய சூழலில் தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக அடாத்தாகக் கையகப்படுத்திய தமிழ் மக்களின் காணிகளில் ஒரு சிறு துண்டேனும் திருப்பி கொடுக்க முடியாது என பௌத்த சாசன அமைச்சின் பிரதிநிதிகள் திட்டவட்டமாக மறுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இவ் விடயங்களில் அரசு கவனத்தில் எடுத்து தீர்வு வழங்க வேண்டும். – என சின்னமோகன் தெரிவித்துள்ளார்.



# புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக மாமுனை வீதி தற்காலிகமாக மூடல்

**(மரியசீலன் திலைக்ஸ்)**

வடமராட்சி கிழக்கு மாமுனை வீதி புனரமைப்பு பணிகளுக்காக தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேசசபையினால் பாழடைந்த மாமுனை வீதியின் புனரமைப்பு பணிகள் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

புனரமைப்பு பணிகள் இடம்பெறும் வீதியினூடான போக்குவரத்துகள் யாவும் கடந்த 11 ஆம் திகதி தொடக்கம் நாளை 15 ஆம் திகதி வரைத் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு, வீதி போக்குவரத்து வீதி மூடப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.



# மன்னாரில் காற்றாலைத் திட்டத்தை திறக்க வரும் முன் கையகப்படுத்தியுள்ள நிலங்களையாவது விடுவியுங்கள்

## மன்னார் அமைப்புக்களின் தலைவர் சிவகரன் ஜனாதிபதிக்குக் கடிதம்

(மன்னார் நிருபர்
எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னாரில் காற்றாலைத் திட்டத்தை திறக்க வரும் முன் கையகப்படுத்தப் பட்டுள்ள நிலங்களையாவது ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க விடுவிக்க வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு என மன்னார் மாவட்ட பொது அமைப் புக்களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ். சிவகரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க விற்கு நேற்று செவ்வாய்க்கிழமை தாம் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப் பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

மன்னார் தீவு பகுதிக்குள் காற்றாலை, கனிம மண் அகழ்வு திட்டங்கள் வேண்டாம் எனும் மன்னார் மக்களின் கூட்டு கோரிக்கையை அடியோடு நிராகரித்து ஆட்சியாளர்கள் தமது நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பது கடும் விசனத்துடன் ஆழ்ந்த கவலை அடைகின்றோம்.

"ஜனநாயகம் என்பது வலிமை அற்ற வர்கள் கடலுக்குள் உப்பை கரைப்பதற்கு ஒப்பானது". சமத்துவம் என்பது உதட் டளவில் அல்ல. அது சமூக சமநீதியாக செயல் வடிவம் பெற வேண்டும்.

இனத்துவ, மொழித்துவ, பிரதேசத்துவ வேறுபாடுகள் அடிப்படையில் பௌத்த தேசியவாத இனவாத அடக்குமுறை கோட்பாட்டை பஞ்சசீல சித்தாந்தம் இன்றி அடிப்படை வாதமாகவே மேலெழுந்தது. அதனால் தான் இந்த நாட்டில் 70 ஆண் டுகளுக்கு மேலாக மேட்டிமை வாத அடக்குமுறையை அணைய விடாமல் பிரகாசித்து பாதுகாத்து ஆட்சி மாறி னாலும், கட்சி மாறினாலும் வழி வரைபடம் மாறுவதில்லை என்பதே கசப்பான




உண்மை.

பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வுகளை புரிந்து கொள்ளாமல் நீதி "நிர்விகல்ப சமாதியாகவே" நீளுறக்கம் கொள்கிறது. சபிக்கப்பட்ட இனமாகவே தமிழ் மக்கள் வாழ்வியல் தொடர்கிறது. 13.08.2025 அன்று தங்களை சந்தித்தபோது மன்னார் மக்களின் விருப்புக்கு மாறாக செயல்பட போவதில்லை என உறுதி கூறினீர்கள்.

மன்னார் மாவட்டம் கேந்திர முக்கி யத்துவம் வாய்ந்த இடமாகும். அதன் இயல்பை கெடுக்காமல் பாதுகாப்பதே அவசியமாகும்.

எமது மக்களின் கூட்டுக் கோரிக்கை யைக் குழி தோண்டிப் புதைத்து விட்டு, திட்டமிட்டபடி 14 காற்றாலை பணிகளும் நடைபெறுகின்றன. கனிம மணல் அகழ்வு முற்றாக நிறுத்தப்படும் என எமக்கு கூறினீர்கள். ஆனால் கனிம மண் அகழ்வு க்குரிய இரண்டு நிறுவ னங்களும் தமது செயற்பாட்டை தொடர்ந்த வண்ணமே உள்ளனர்.

அதானிக்கு வழங்க இருந்த 52 காற்றாலை க்குரிய இடங்களும் வேலை நிறுத்தப்படவில்லை. அதானியின் கம்பெனிதான் வெளியேறியதே தவிர திட்டம் முழுமையாக கைவிடப்படவில்லை. காணி சுவீகரிப்பும் நிறுத்தப்படவில்லை.

இரண்டு லட்சத்து இருபத்தி ஓராயிரத்து இரு நூற்றி இருபது ஹெக்டேர் (221,220) நிலம் மன்னார் மாவட்டத்தில் வன திணைக்களம், வன விலங்குகள் திணைக்களத்தினாலும் வர்த்தமானிக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இதில் 35,750 ஏக்கர் நிலம் வளம் மிக்க பயிர்ச்செய்கைக்குரிய இடமாகும். அதில் 108 குளங்களும் உள்ளடங்கு கின்றன. இதனை விடுவிக்குமாறு தங் களிடம் என்னால் கோரிய போது ஆறு மாதத்துக்குள் விடுவிப்பதாக கூறினீர் கள் .

இதுவரை ஏதும் நிகழவில்லை. உரித்து நிர்ணயம் செய்யப்பட்ட காணி யைக் கூட பயன்படுத்த முடியாத துர்ப்பாக்கிய நிலை காணப்படுகிறது. ஏழைகள் வாழ்வாதாரத்திற்கு பாலைப் பழம் பிடுங்குவதற்கு கூட முடியாத மிக மோசமான அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

அடிப்படை உரிமையும் நசுக்கப்படுகி றது. புதிதாக குடியேறுவதற்கு ஒரு துண்டு நிலம் கூட இல்லை. முப்படைகளுக்கும் பௌத்த கோயில்கலையும் கட்டமைப் பதற்கு எந்தச் சட்டமும் கட்டுப்படுத்து வதில்லை.

மன்னாரின் வளத்தையும் சுரண்டி வாழ்வியலையும் கெடுப்பது நியாயம் தானா? தற்போதைய இயற்கை அனர்த் தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கூட இதுவரை முறையாக நிவாரணம் கிடைக்கவில்லை.

பாட்டாளி வர்க்கத்தின் கூட்டாளி எனக் கூறும் தாங்கள் எமது மக்களின் உணர் வுகளை புரிந்து கொண்டு காற்றாலை திட்டத்தை திறக்க வரும் முன் இந்த நிலங்களையாவது விடுவியுங்கள். இது எமது மக்களின் எதிர்பார்ப்பு ஆகும். - என குறித்த கடிதத்தில் மேலும் குறிப் பிடப்பட்டுள்ளது.

# யாழ். நகரில் தான் வேலை செய்த நகைக் கடையில் ரூ.10 கோடி நகைகளை ஆட்டையைப் போட்ட யுவதி

யாழ்ப்பாணம் நகரில் உள்ள பிரபல நகைக்கடை ஒன்றில் 10 கோடி ரூபா பெறுமதி மதிக்கத்தக்க 2 கிலோ கிலோ கிராம் தங்க நகைகளை திருடினார் எனக் இளம் பெண் ஒருவர் கைது செய் யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் புறநகரில் வசிக்கும் இளம் பெண் ஒருவரே தான் பணி யாற்றிய நகைக் கடையில் சிறிது சிறிதாக தங்க நகைகளை திருடியுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட பெண்ணை வரும் ஜனவரி 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் நேற்று உத் தரவிட்டது.

யாழ்ப்பாணம் மாநகர மத்தியில் இயங்கும் பிரபல நகைக் கடைகளில் ஒன்றில் சுமார் ஒன்றரை வருடம் பணியாற்றிய பெண் 3 மாதங்களுக்கு முன்னர் தனக்கு ஜனவரி 21ஆம் திகதி திருமணம் என்று கூறி பணியிலிருந்து விலகியுள்ளார்.

இந்த நிலையில் நகைக் கடையில் கணக்கெடுப்பில் சுமார் 2 கிலோ கிராம் தங்க நகைகள் காணாமல் போனமை அறியப்பட்டு ஆராயப்பட்ட போதே விடயம் கண்டறியப்பட்டு யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலையத்தில் நகைக் கடை முகாமைத்துவத்தினால் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

முறைப்பாடு தொடர்பில் விசார ணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாணம் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினர், இளம் பெண் ஒருவரை நேற்று கைது செய்துள்ளனர்.

அவரிடம் முன்னெடுத்த விசார ணைகளில் திருடப்பட்ட நகைகளை அடகு வைத்தும், விற்பனை செய்தும் நிலத்துக்கு அடியில் புதைத்து வைத்தும் உள்ளார் என வாக்குமூலம் வழங்கப் பட்டுள்ளது.

சான்றுப்பொருள்களை மீட்கும் விசாரணைகளை பொலிஸார் முன் னெடுத்துள்ளமையுடன் தொடர்புடை யவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர்.




# கடலரிப்புக்கான கல்லணை இடும் அரச பணியில் காரைதீவு மட்டும் புறக்கணிக்கப்படுகின்றமை ஏன்?

## பிரதேச சபை அமர்வில் தவிசாளர் பாஸ்கரன் காட்டம்!

**(வி.ரி.சகாதேவராஜா)**

காரைதீவுக் கடற்கரைப் பிரதேசம் அண்மைக் காலமாக ஏற்பட்டுள்ள உக்கிரமான கடலரிப்பினால் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகின்றது. அதனை அரசாங்கம் கண்டு கொள்வதாக இல்லை. அரச பிரதிநிதிகள் அருகிலுள்ள பிரதேசங்களுக்கு விஜயம் செய்கின்றார்களே தவிர காரைதீவுக்கு வருகிறார்களில்லை. ஏனிந்த பாரபட்சம்?

– இவ்வாறு காரைதீவு பிரதேச சபையின் தவிசாளர் சு.பாஸ்கரன் கேள்வி எழுப்பினார்.

காரைதீவு பிரதேச சபையின் புத்தாண்டின் முதல் அமர்வும் ஏழாவது அமர்வும் நேற்று செவ்வாய்க்கிழமை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடலரிப்பினால் பொதுமக்களின் வாழ்வாதாரம் மற்றும் கடலோரப் பாதுகாப்பு பெரும் ஆபத்தில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலைவரத்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்ய தேசிய மக்கள் சக்தி அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஞ்சுள ரத்நாயக்க, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவீர, கரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் மாகாண பொறியியலாளர் எம். துளசிதாசன் உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் உள்ளூர் அரச அதிகாரிகள் கல்முனை கடற்கரைப் பகுதிகளுக்கு விஜயம் செய்தனர் என ஊடகங்கள் வாயிலாக அறிகிறோம்.

கல்முனை, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, நிந்தவூர் உள்ளிட்ட கரையோரப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள அபாயத்தை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் உறுதியளித்தனர் என ஊடகங்களில் வந்தது.

எனவே கடலரிப்புக்கான கல்லணை அரசபணியில் காரைதீவு திட்டமிட்டு புறக்கணிக்கப்படுகிறதா? அரசின் கண்மூடித்தனமான அலட்சியமா இது?

காரைதீவு இன்று கடுமையான கடலரிப்பின் முன் நிராதரவாக நிற்கும் நிலையில், கடலரிப்பை கட்டுப்படுத்த அரசால் மேற்கொள்ளப்படும் கல்லணை (கற்கள் இடும்) பணிகளில் காரைதீவு முற்றாக புறக்கணிக்கப்பட்ட. வருவது கடும் அரசியல் சந்தேகங்களையும் கேள்விகளையும் எழுப்பியுள்ளது.

அண்மைக் காலங்களில் கல்முனை, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, நிந்தவூர் போன்ற பகுதிகளில் அரசியல் பிரதிநிதிகள், உயர் அதிகாரிகள் அணிவகுத்து வந்து அவசரமாக கற்கள் இடும் பணிகளை முன்னெடுத்துவரும் போது, அதே கடலோர வரிசையில் அமைந்துள்ள காரைதீவு மட்டும் ஏன் அரசின் பார்வைக்கு அப்பால் தள்ளப்பட்டிருக்கிறது என்ற கேள்வி இன்று மக்கள் மத்தியில் உரத்த குரலாக ஒலிக்கிறது.

அவர்கள் இங்கு வரும்போது எம்மை அழைப்பதில்லை. காரைதீவு பெரிய பாலம் திருத்த வேலை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வுக்கு அழைக்கவில்லை. அதுபோல தொடர்ந்து புறக்கணிப்பு காட்டப்பட்டிருக்கிறது.

காரைதீவு கடற்கரைப் பகுதியில் வீடுகள், விளையாட்டு மைதானங்கள், வழிபாட்டுத் தலங்கள், பொதுச் சொத்துகள் அனைத்தும் கடலால் மெல்ல மெல்ல அழிக்கப்பட்டுவரும் நிலையில் இத்தகைய புறக்கணிப்பு நீதியா?

அனைத்து மூவின குடிமக்களுக்கும் சம உரிமை, சம பாதுகாப்பு என்று அரசியல் மேடைகளில் முழங்கும் சமகால அரசியல் தலைமைகள், காரைதீவு வந்தால் மட்டும் ஏன் மௌனமாகி விடுகின்றன? கடலரிப்பு இனத்தைப் பார்க்குமா? மொழியைப் பார்க்குமா? ஆனால் அரசின் நடவடிக்கைகள் மட்டும் இனத்தையும் மொழியையும் பார்த்து செயல்படுகின்றனவா என்ற கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

எனவே இனியாவது நீதியாக செயற்படுங்கள். – என்றார்.

மேலும் உறுப்பினர் பர்ஹான் உட்பட உறுப்பினர்கள் பலரும் கடலரிப்பு தொடர்பாக பலவித கருத்துகளைக் கூறினர்.





# இலங்கையில் போர் கால வன்முறைகள் பெரும்பாலும் கவனிக்கப்படாமல் உள்ளன

## ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகம் அறிக்கை

இலங்கையில் மோதல் தொடர்பான பாலியல் வன்முறைகள் பெரும்பாலும் இன்றுவரை கவனிக்கப்படாமல் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அலுவலகம் நேற்று வெளியிட்ட ஆய்வறிக்கையொன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.


அத்துடன் பாதிக்கப்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் இருவருக்கும், நீண்டகாலமாக நீதி மறுக்கப்படுவதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட சமூகத்தினர் பயம், அவமானம் மற்றும் பழிவாங்லுக்கு அச்சப்படுவதே இதற்கு காரணம் என்று அந்த ஆய்வறிக்கை கூறுகிறது.

குறிப்பாக 2009 ஆம் ஆண்டு போர் நிறைவடைந்த பின்னர், அரச படைகளாலும், இராணுவத்தினராலும் பாலியல் வன்முறைகள் பரவலாக நிகழ்த்தப்பட்டன என இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், பாதிக்கப்பட்ட பலர் தொடர்ந்தும் நாட்பட்ட உடல் காயங்கள், மலட்டுத்தன்மை, உளவியல் முறிவுகள் மற்றும் தற்கொலை எண்ணங்களால் அவதிப்படுகின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில், உள்நாட்டு பொறுப்புணர்வை மேம்படுத்துவதற்கும், மாற்றத்தக்க சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கும் இலங்கை அரசாங்கம் தமது உறுதிப்பாட்டை வெளிப்படுத்துமாறு கோரப்பட்டுள்ளது.






# மாடியிலிருந்து வீழ்ந்து சுவீடன் யுவதி மரணம்

நீர்கொழும்பு பகுதியில் உள்ள பிரபல விடுதி ஒன்றின் கட்டடத்தில் இருந்து கீழே வீழ்ந்து 26 வயதுடைய சுவீடன் நாட்டுப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி யுவதி நீர்கொழும்பு பகுதியில் உள்ள விடுதி ஒன்றின் 9 ஆவது மாடியில் தங்கியிருந்தபோது இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது.

விசாரணைகளின்படி, உயிரிழந்த பெண் திருமணமானவர் என்பதும், அவரது கணவர் ஒரு தொழிலதிபர் என்பதும் தெரியவந்துள்ளது.

சம்பவம் நடந்த நேரத்தில் அவரது கணவர் வணிக நிமித்தமாக குருநாகல் பகுதிக்கு சென்றிருந்தார் என தெரிவிக்கப்படுகின்றது.

அவர் கீழே வீழ்வதற்கு முன்னதாக சுமார் ஒரு மணிநேரம் தொலைபேசியில் உரையாடிக்கொண்டிருந்தார் என்று முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தநிலையில் அவரது கையடக்கத் தொலைபேசியை மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.



# சீன அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட சீருடைத் துணிகள் கையளிக்கும் நிகழ்வு

சீன அரசாங்கத்தினால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட 2026ஆம் ஆண்டுக்கான பாடசாலை சீருடை துணிகளை உத்தியோகப்பூர்வமாகக் கையளிக்கும் நிகழ்வு நேற்று கொழும்பு துறைமுக வளாகத்தில் நடைபெற்றது.

இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங், சீருடைத் துணிகளைப் பிரதமர் ஹரிணி அமரசூரியவிடம் கையளித்தார்.

இந்த திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் உள்ள சுமார் 4,418,404 மாணவர்கள் 2026 ஆம் ஆண்டுக்கான சீருடைத் துணிகளைப் பெற்றுக்கொள்ளத் தகுதி பெற்றுள்ளனர் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனவரி 19 முதல் நாடு முழுவதும் உள்ள வலயக் கல்வி அலுவலகங்களுக்கு இந்த சீருடைத் துணிகளை விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.


















# ஆசிரியர் தொழிற்சங்கப் பிரதிநிதிகளை ஜனாதிபதியும் பிரதமரும் சந்தித்தனர்

அரசாங்கத்தின் புதிய கல்வி சீர்திருத்தங்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய ஆகியோர் நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஆசிரியர் தொழிற்சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்தனர்.

இதன்போது கல்வி சீர்திருத்தங்களின் அவசியத்தை ஏற்றுக்கொண்ட தொழிற்சங்கங்கள், 6ஆம் தர பாடத்திட்டத்தில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியதுடன், அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட விருப்பம் தெரிவித்தனர்.

தேசிய கல்வி ஆணைக்குழு, தேசிய கல்வி நிறுவனம், கல்வியியலாளர்கள், சட்டத்தரணிகள், பேராசிரியர்கள் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஒரு முறையான பொறிமுறையின் கீழ் இந்த செயற்பாடுகள் அமைய வேண்டும் என தொழிற்சங்கங்கள் முன்மொழிந்தன.

ஆசிரியர்கள் மற்றும் பெற்றோரின் நம்பிக்கையைப் பெறுவது சீர்திருத்தங்களின் வெற்றிக்கு மிக முக்கியமானது என ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டார்.

அத்துடன், முதலாம் தரத்திற்கான சீர்திருத்தங்கள் திட்டமிட்டபடி நடைபெறும்.

ஆனால், ஆசிரியர் பயிற்சி மற்றும் தொழில்நுட்ப சவால்கள் காரணமாக 6ஆம் தரத்திற்கான சீர்திருத்தங்கள் 2027ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படும் என ஜனாதிபதி விளக்கமளித்தார்.

மேலும் ஸ்மார்ட் பலகைகள், தொலைக்காட்சிகள் மற்றும் கணினிகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் அரசாங்க நிதியிலேயே வழங்கப்படும் என்றும் இதற்காகப் பெற்றோரிடம் பணம் வசூலிக்கப்பாது எனவும் உறுதியளிக்கப்பட்டது.

அத்துடன், மாகாணங்களுக்கு இடையிலான ஆசிரியர் இடமாற்றங்கள், பதவியுயர்வுகள், சம்பள முரண்பாடுகள் மற்றும் அதிபர் சேவையில் உள்ள சவால்கள் குறித்தும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

















# டித்வா புயல், மண் சரிவால் 174 பேர் இன்னும் மாயம்

டித்வாபுயலால் காணாமல் போனவர்களைத் தேடும் பணிகள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இருப்பினும், நிலவும் கடும் மழை காரணமாக கேகாலை மற்றும் நுவரெலியா போன்ற மாவட்டங்களில் தேடுதல் நடவடிக்கைகள் தற்காலிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கேகாலை மாவட்டத்தில் காணாமல் போனவர்களைத் தேடும் பணிகள் மழை காரணமாகத் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலாளர் தேசப்பிரிய பண்டார தெரிவித்துள்ளார். கடந்த வார இறுதியில் ஒருவரது உடலம் மீட்கப்பட்டுள்ளது.

மண்சரிவு காரணமாக சுமார் 40 அடி உயரத்திற்கு மணல் மேடுகள் உருவாகியுள்ளதால், இயந்திரங்களைப் பயன்படுத்தித் தேடுதல் நடத்துவதில் பெரும் சிரமம் நிலவுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நுவரெலியா மாவட்டத்தில் ரம்பொடை போன்ற பகுதிகளில் தேடுதல் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ள போதிலும் ஏனைய இடங்களில் தொடர்கின்றன. கடந்த வார இறுதியில் தலையற்ற நிலையில் உடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

புயல் தாக்கி ஒரு மாதத்திற்கும் மேலாகியுள்ளதால், இனிவரும் காலங்களில் மீட்கப்படும் உடலங்களை அடையாளம் காண்பது கடினமாக இருக்கலாம் என அதிகாரிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தற்போதைய தரவுகளின்படி, டிட்வா அனர்த்தத்தினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 648 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் 174 பேர் இன்னும் காணாமல் போனவர்களாகப் பட்டியலிடப்பட்டுள்ளனர்.

# டித்வா புயல் காரணமாக சுமார் 5,000 மண்சரிவுகள்

டித்வா புயலுக்கு பின்னர், நாட்டில் சுமார் 4,800 மண்சரிவுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன என ஆதர்சி கிளார்க் நிலையம் தெரிவித்துள்ளது.

செயற்கைக்கோள் தரவுகள் ஊடாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இந்த விடயம் தெரியவந்துள்ளதாக, மேற்படி நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் குமாரி மிகஹகொடுவ தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

டித்வா புயலுக்கு பின்னர் பெறப்பட்ட செயற்கைக்கோள் நிழற்படங்கள் மற்றும் தரவுகளைப் பயன்படுத்தி, மண்சரிவு பின்னரான தரைத்தோற்ற வரைபடமாக்கல் மேற்கொள்ளப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

அந்த வரைபடங்களை பகுப்பாய்வு செய்தபோது, ஊடகங்கள் வாயிலாக இதுவரை அறிவிக்கப்பட்டதை விடவும் மிக அதிக எண்ணிக்கையிலான மண்சரிவுகள் பதிவாகியுள்ளமை கண்டறியப்பட்டதாக குமாரி மிகஹகொடுவ குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் செயற்கைக்கோள் நிழற்படங்களின் அடிப்படையில் 1,241 இடங்களில் பாரிய மண்சரிவுகள் ஏற்பட்டன என கூறியிருந்தது.

இந்த நிலையில், மக்கள் வாழும் பகுதிகள் மற்றும் அணுகல் வசதிகளை கொண்ட இடங்களை மாத்திரம் அனர்த்த முகாமைத்துவ நிலையம் அடையாளம் கண்டிருக்கலாம் என குமாரி மிகஹகொடுவ தெரிவித்துள்ளார்.

எனினும், தற்போது வெளியிடப்பட்டுள்ள செயற்கைக்கோள் நிழற்படங்களில், காடுகளுக்குள் இடம்பெற்ற மண்சரிவுகளின் எண்ணிக்கைகளும் கணக்கிடப்பட்டுள்ளதாக ஆதர்சி கிளார்க் நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் குமாரி மிகஹகொடுவ சுட்டிக்காட்டியுள்ளார்.




# எரிபொருள் வழங்கும் புதிய நடைமுறைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது

அரச நிறுவனங்களுக்கு சொந்தமான வாகனங்களுக்கு எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்காக டிஜிட்டல் அட்டை முறையை அறிமுகப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்த புதிய நடைமுறையின் ஊடாக எரிபொருள் தேவைக்கேற்ப, நிகழ்நிலை வங்கி முறைமையின் ஊடாக அதற்குரிய பணத்தை மீளச் செலுத்த முடியும்.

மேலும் தனிநபர்களின் தலையீடு குறைவடைவதால், அதிக வெளிப்படைத் தன்மையுடனும் வினைத்திறனுடனும் எரிபொருளைப் பெற்றுக்கொள்ள வழி வகுக்கும்.

அத்துடன் முறையற்ற எரிபொருள் பயன்பாட்டைக் கட்டுப்படுத்த இது உதவும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இலங்கை வங்கி மற்றும் இலங்கை கனியவள கூட்டுத்தாபனம் ஆகியன இணைந்து இந்த டிஜிட்டல் அட்டை முறையை அறிமுகப்படுத்தியுள்ளன.

இதற்கமைய, முதற்கட்டமாக ஒரு முன்னோடித் திட்டமாக ஜனாதிபதி அலுவலகத்தின் வாகனக் கூட்டமைப்புக்கு இந்த முறையை நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அங்கு கிடைக்கும் வெற்றியைப் பொறுத்து, ஏனைய அரச நிறுவனங்கள் மற்றும் பொலிஸ் உள்ளிட்ட திணைக்களங்களின் வாகனங்களுக்கும் இந்த முறையை விரிவுபடுத்த ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.



# அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் பண்டிகைக் கால முற்பணம் அதிகரிப்பு

அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் பண்டிகை முற்பணத்தை 15,000 ரூபாவாக அதிகரிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

தற்போது நடைமுறையிலுள்ள தாபன விதிக்கோவை ஏற்பாடுகளுக்கமைய, அரச ஊழியர் ஒருவர் தைப் பொங்கல், ரமழான், சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு, வெசாக், தீபாவளி, நத்தார் போன்ற பண்டிகைகளுக்காகவும், சிவனொளிபாத மலை தரிசனம் மற்றும் ஹஜ் கடமை போன்ற யாத்திரிகப் பயணங்களுக்காகவும் 10,000 ரூபாவை முற்பணமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த முற்பணத் தொகையானது எவ்வித வட்டியுமின்றி 08 மாதத் தவணைகளில் மீள அறவிடப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், இந்த முற்பணத் தொகையை 15,000 ரூபாவாக அதிகரிப்பதற்கு 2026 ஆம் ஆண்டுக்கான பாதீட்டு திட்டத்தின் மூலம் முன்மொழியப்பட்டிருந்தது.

அதற்கமைய அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் பண்டிகை முற்பணத்தை அதிகரிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

# அரச சேவையில் அத்தியாவசியமான வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதி

## 23,344 ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கவும் அங்கீகாரம்

அரச சேவையின் வினைத்திறனை மேம்படுத்தும் நோக்கில், அத்தியாவசிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக பிரதமரின் செயலாளர் தலைமையிலான அதிகாரிகள் குழு முன்வைத்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அரச சேவையில் தற்போது காணப்படும் ஆளணித் தேவைகள் மற்றும் முன்னுரிமைகளை ஆய்வு செய்வதற்காக 2024.12.30 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டது.

பிரதமரின் செயலாளர் தலைமையில் அமைக்கப்பட்ட இக்குழு, அரச நிறுவனங்களில் கட்டாயமாக நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களை அடையாளம் காணும் பணியில் ஈடுபட்டது.

பல்வேறு அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு கோரிக்கைகளை இந்தக் குழு விரிவாக ஆராய்ந்தது.

அதன் அடிப்படையில் மிக அவசியமான மற்றும் தட்டிக்கழிக்க முடியாத பதவிகளுக்கான ஆட்சேர்ப்புப் பட்டியலைக் குழு தயாரித்துள்ளது.

இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் ஒரு குறிப்பிட்ட கால அட்டவணையின் கீழ் முறைப்படியாக முன்னெடுக்கப்படும்.

குழு பரிந்துரைத்துள்ள மேற்படி ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை அந்தந்த அமைச்சுகள் மற்றும் நிறுவனங்கள் ஊடாக முன்னெடுப்பதற்கு பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

| தொடர் இல | அமைச்சுக்கள்/மாகாணசபை/ஆணைக்குழு | ஆட்சேர்ப்பு செய்வதற்காக குழுவால் விதந்துரைக்கப்பட்டுள்ள பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு | 442 |
| 2. | நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு | 452 |
| 3. | சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு | 705 |
| 4. | கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு | 10 |
| 5. | பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு | 37 |
| 6. | நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 76 |
| 7. | பாதுகாப்பு அமைச்சு | 102 |
| 8. | பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சு | 19 |
| 9. | வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு | 10 |
| 10. | வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு | 01 |
| 11. | போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு | 166 |
| 12. | கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | 167 |
| 13. | வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர்வழங்கல் அமைச்சு | 33 |
| 14. | கடற்றொழில், நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு | 50 |
| 15. | விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சு | 23 |
| 16. | துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு | 248 |
| 17. | மத்திய மாகாண சபை | 203 |
| 18. | வடமத்திய மாகாண சபை | 06 |
| 19. | தேசிய பொலிஸ் ஆணைக்குழு | 01 |
| 20. | இலங்கை ஆசிரியர் சேவைக்கான ஆசிரியர்கள் | 23,344 |
| | மொத்தம் | 26,095 |



# பாடசாலை மாணவர்களுக்கு 6,000 ரூபா கொடுப்பனவு

## அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது

அஸ்வெசும நலன்புரித் திட்டத்தின் கீழ் உள்ள குடும்பங்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக, ஒரு பிள்ளைக்கு 6,000 ரூபா வீதம் கொடுப்பனவு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அஸ்வெசும திட்டத்திலுள்ள குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள், நலன்புரி நன்மைகள் சபை ஊடாக இக்கொடுப்பனவைப் பெறுவர்.

அத்துடன், அஸ்வெசுமவில் உள்வாங்கப்படாத, 300 இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில்பயிலும்மாணவர்களும்,பிரிவெனாக்கள் மற்றும் துறவுப் பெண்கள் ஆச்சிரமங்களில் கல்வி பயில்கின்ற மாணவர்கள், துறவு மாணவர்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் தங்கியிருந்து பாடசாலை செல்லும் மாணவர்கள் ஆகியோரும் இந்த கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள தகுதியுடையவர்களாவர்.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை தனது அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

# 83 மீனவர்கள், 252 படகுகளை விடுவிக்க நடவடிக்கை தேவை

## ஜெய்சங்கருக்கு ஸ்டாலின் கடிதம்




இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிப்பதற்கும், தமிழக மீனவர்கள் மீண்டும் கைது செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்தவும், உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இலங்கைக்கு அருகே தென்கிழக்கு வங்கக்கடலில் ஏற்பட்டிருந்த ஆழ்ந்த காற்றழுத்து தாழ்வு மண்டலம் காரணமாக கடந்த ஒரு வாரமாக இராமேசுவரம் மீனவர்கள் கடலுக்குச் செல்வதற்கு அனுமதி சீட்டு ரத்து செய்யப்பட்டிருந்த நிலையில் கடலுக்குச் செல்லவில்லை.

இந்நிலையில், கடந்த ஞாயிற்றுக் கிழமை வானிலை இயல்பு நிலைக்கு திரும்பியதை தொடர்ந்து, நேற்று முன்தினம் திங்கள் கிழமை காலையில் இராமேசுவரம் விசைப்படகு மீனவர்கள் 400 இற்கும் மேற்பட்ட படகுகளில் அனுமதி டோக்கன் பெற்று 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குச் சென்றனர். இதனிடையே, நெடுந்தீவு அருகே இராமேசுவரம் மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கூறி, 10 மீனவர்களை நேற்று செவ்வாய் கிழமை அதிகாலை கைது செய்தனர்.

இந்நிலையில் இது தொடர்பாக வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் எழுதியுள்ள கடிதத்தில்,

“அறுவடைத் திருநாளான பொங்கல் பண்டிகையையொட்டி, தமிழ்நாட்டு மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ள ஒரு துயரச் சம்பவம் தொடர்பாகவும், தொடர்ந்து அவர்கள் எதிர்கொண்டு வரும் இன்னல்கள் தொடர்பாகவும் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

13-01-2026 அதிகாலையில், இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகில் மீன்பிடிப்பதற்காக கடலுக்குச் சென்ற இராமநாதபுரத்தைச் சேர்ந்த 10 மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தமிழ்நாட்டுமீனவர்கள்இதுபோன்றுதொடர்ந்து கைது செய்யப்படுவதும், அவர்களின் மீன்பிடிப் படகுகள் சிறைபிடிக்கப்படுவதும் மிகுந்த கவலையளிக்கிறது.

மேலும், தற்போதைய நிலவரப்படி, சமீபத்தில் கைது செய்யப்பட்டவர்கள் உட்பட, இதுவரை மொத்தம் 83 மீனவர்களும், 252 மீன்பிடிப் படகுகளும் இலங்கை வசம் உள்ளது.

சிறைபிடிக்கப்பட்டுள்ள மீனவர்களின் குடும்பத்தினர் எதிர்கொள்ளும் துயரமான மற்றும் நிச்சயமற்ற தன்மையைக் கருத்தில் கொள்க.

பொங்கல் பண்டிகையினை தங்கள் குடும்பத்தினருடன் கொண்டாடிட ஏதுவாகவும், கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் இலங்கை அரசு உடனடியாக விடுவித்திடவும், தொடர்ந்து இதுபோன்ற கைது நடவடிக்கைகளைத் தடுத்திடவும், ஒன்றிய அரசு உரிய தூதரக நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும்.” எனக் குறிப்பிட்டுள்ளார்.

# அவனியாபுரம் ஜல்லிக்கட்டு இறுதிக்கட்டப் பணிகள் தீவிரம்



நாளைய பொங்கல் பண்டிகை நாளில் நடக்கும் மதுரை அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டி இறுதிக்கட்ட ஏற்பாடு பணிகள் தீவிரமாக நடக்கின்றன. சிறந்த காளை, மாடுபிடி வீரர்களுக்கு உளவியந்திரங்கள், தங்க காசுகள் உள்ளிட்ட பரிசுகள் வழங்கப்பட உள்ளன.

தமிழர்களின் பாரம்பரிய ஜல்லிக்கட்டு போட்டிகள் தை மாதம் முழுவதும் மாநிலத்தின் பல பகுதிகளில் நடத்தப்படும். தை முதல் நாளில் அவனியாபுரத்தில் ஜல்லிக்கட்டு நடைபெறும். நிகழாண்டில் மாவட்ட நிர்வாகம் சார்பில் அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டி நாளை டைபெறுகிறது.

இதில் பங்கேற்கும் காளைகள் மற்றும் மாடுபிடி வீரர்கள் பதிவு செய்ய வலைதளம் வழியாக கடந்த 7,8 ஆகிய திகதிகளில் விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இதில், கடந்த ஆண்டு 2,026 காளைகள் பதிவு செய்யப்பட்ட நிலையில், நிகழாண்டு 3,090 காளைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 1,064 காளைகள் அதிகம்.

அதே போன்று, கடந்த ஆண்டில் 1,735 மாடுபிடி வீரர்கள் பதிவு செய்த நிலையில் நிகழாண்டு 1,849 வீரர்கள் பதிவு செய்துள்ளனர். இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 114 பேர் அதிகம். மேலும் காளைகள், வீரர்களின் தகுதிகளை பரிசீலனை செய்ய வருவாய்த்துறை, கால்நடை பராமரிப்புத் துறை, மருத்துவத் துறை அலுவலர்கள் அடங்கிய குழுக்கள் நியமிக்கப்பட்டு, தகுதி வாய்ந்த வீரர்கள், காளைகளுக்கு வலைதளம் மூலம் டோக்கன் வழங்கப்படும் என மாவட்ட நிர்வாகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஜல்லிக்கட்டுக்காக அவனியா புரம் – திருப்பரங்குன்றம் சாலை யில் வாடிவாசல் அமைக்கும் பணிகள் நடந்து வருகின்றன. இதில் 10 அடி முதல் 12 அடி உயர தென்னை மரத்தாலான தூண்கள் மூலம் வாடிவாசல் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், ஜல்லிக்கட்டு நடக்கும் இடத்தில் மேடை, தடுப்புகள் உள்ளிட்டவை அமைக்கும் பணிகள், குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், கால்நடைகள் பராமரிப்புத் துறை சார்பில் காளைகளுக்கு மருத்துவப் பரிசோதனை நடைபெறும் இடம், வாடிவாசல் பின்பகுதியில் காளைகள் வரிசையாகச் செல்ல தடுப்புகள், அவனியாபுரம் பிரிவில் இருந்து பெரியார் நகர் செல்லும் வீதியின் இருபுறமும் பார்வையாளர்கள் நிற்க இரும்புத் தடுப்புகள், காளைகள் பரிசோதனை மையம், மாடுபிடி வீரர்கள் சோதனை மையம் உள்ளிட்டவை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் காலை அமைச்சர் பி.மூர்த்தி, மாவட்ட ஆட்சியர் பிரவீன் குமார், மாநகராட்சி ஆணையர் சித்ரா, காவல் ஆணையர் ஜெ.லோகநாதன், எம்எல்ஏ வெங்கடேசன் மற்றும் அதிகாரிகள் பார்வையிட்டனர்.

# ஈரானிய தேசபக்தர்களே தொடர்ந்து போராடுங்கள்

## ட்ரம்ப்பின் அதிரடிப் பதிவு




அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், ஈரானில் பல ஆண்டுகளாக இல்லாத வகையில் நடைபெற்று வரும் பாரிய போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் தனது 'ட்ரூத் சோஷியல்' தளத்தில் பதிவொன்றை இட்டுள்ளார்.

டொனால்ட் ட்ரம்ப் தமது சமூக ஊடக பதிவில், "ஈரானிய தேசபக்தர்களே, தொடர்ந்து போராடுங்கள் – உதவி அதன் வழியில் உள்ளது" என்று கூறியுள்ளார்.

அத்துடன் போராட்டக்காரர்கள் மீதான அறிவற்ற கொலைகள் நிறுத்தப்படும் வரை, ஈரானிய அதிகாரிகளுடனான அனைத்து சந்திப்புகளையும் தாம் இரத்து செய்துள்ளதாக அவர் அறிவித்துள்ளார்.



# ஈரானில் இரண்டு வார போராட்டங்களின்போது பாதுகாப்புப் படையினர் உட்பட 2,000 பேர் பலி

ஈரானில் கடந்த இரண்டு வாரங்களாக நடைபெற்று வரும் நாடு தழுவிய போராட்டங்களில், பாதுகாப்புப் படையினர் உட்பட சுமார் 2,000 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என ஈரான் அரசாங்க அதிகாரி ஒருவர் அதிகாரப்பூர்வமாகத் தெரிவித்துள்ளார் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மிகக் கடுமையான ஒடுக்குமுறைகளுக்கு மத்தியில், இவ்வளவு அதிகமான உயிரிழப்புகளை ஈரானிய அதிகாரிகள் ஒப்புக்கொண்டிருப்பது இதுவே முதல் முறையாகும்.

எனினும், உயிரிழந்தவர்களில் எத்தனை பேர் பொதுமக்கள் மற்றும் எத்தனை பேர் பாதுகாப்புப் படையினர் என்ற தனித்தனி விபரங்களை அவர் வெளியிடவில்லை.

அத்துடன், இந்தப் படுகொலைகளுக்குப் பின்னால் பயங்கரவாதிகள் இருப்பதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

ஈரானில் நிலவும் மிக மோசமான பொருளாதார வீழ்ச்சியே இந்தப் போராட்டங்களுக்குத் தூண்டுகோலாக அமைந்தது.

இது கடந்த மூன்று ஆண்டுகளில் ஈரானிய மதத் தலைவர்கள் எதிர்கொள்ளும் மிகப்பெரிய உள்நாட்டுச் சவாலாகும்.

இந்தப் போராட்டங்களுக்கு அமெரிக்காவும் இஸ்ரேலுமே காரணம் என ஈரான் குற்றம் சாட்டியுள்ளது.

கடந்த ஆண்டு ஈரான் மீது நடத்தப்பட்ட அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய தாக்குதல்களைத் தொடர்ந்து, தற்போது சர்வதேச அழுத்தம் அதிகரித்துள்ள சூழலில் இந்த வன்முறைகள் வெடித்துள்ளன.




# ஈரான் மக்கள் போராட்டங்கள் புதிய மாற்றத்துக்கான அறிகுறிகள்

## அரசியல் ஆய்வாளர்கள் கருத்து

ஈரானில் கடந்த சில நாள்களாக தீவிரமடைந்து வரும் மக்கள் போராட்டங்கள், நாட்டின் அரசியல் வரலாற்றில் ஒரு முக்கியமான திருப்பமாக அமையக்கூடும் என அரசியல் பார்வையாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

1979ஆம் ஆண்டு நடைபெற்ற இஸ்லாமிய புரட்சிக்குப் பிறகு, இத்தகைய பரவலான மற்றும் தொடர்ச்சியான மக்கள் எதிர்ப்புகள் உருவாகியிருப்பது இதுவே முதல் முறை எனக் கூறப்படுகிறது.

இதனால், இது இன்னொரு பெரிய அரசியல் மாற்றத்திற்கான அடையாளமாக இருக்கலாம் என்ற மதிப்பீடுகள் எழுந்துள்ளன.

இந்தப் போராட்டங்களுக்கு முக்கிய காரணங்களாக கடுமையான பொருளாதார சிக்கல்கள், உயர்ந்து வரும் வேலைவாய்ப்பின்மை, பணவீக்கம், வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பு, சமூக சுதந்திரங்களுக்கான கோரிக்கைகள் மற்றும் ஆட்சியமைப்பின் மீது நிலவும் அதிருப்தி ஆகியவை குறிப்பிடப்படுகின்றன.

குறிப்பாக, இளைஞர்கள் மற்றும் பெண்கள் அதிக அளவில் இந்த எதிர்ப்புப் போராட்டங்களில் பங்கேற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

அரசு தரப்பில் போராட்டங்களைக் கட்டுப்படுத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் கடுமையாக்கப்பட்டுள்ள நிலையில், போராட்டங்கள் எவ்வளவு தூரம் சென்று அரசியல் மாற்றமாக மாறும் என்பது இன்னும் தெளிவாக இல்லை. இருப்பினும், இந்த நிகழ்வுகள் ஈரானின் உள்நாட்டு அரசியல் மட்டுமல்லாது, அதன் வெளிநாட்டு உறவுகள் மற்றும் பிராந்திய அரசியல் சமநிலையிலும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

மொத்தத்தில், ஈரானின் எதிர்கால அரசியல் பாதையைத் தீர்மானிக்கும் முக்கிய கட்டத்தில் நாடு நின்றுகொண்டிருப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.



# இன்றைய ராசி பலன்கள்- 14.01.2026




உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்யும் நாளாக அமையும். பணம் அல்லது வேலை தொடர்பான புது முயற்சியில் இன்று நீங்கள் இறங்கலாம்.

உங்கள் பணியில் உற்சாகமான கட்டம். பணிகளை அமைதியாக கையாள வேண்டும். இதன் மூலம் பணியில் வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையிடம் இனிமையான பேச்சை பராமரிப்பீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு செல்வீர்கள்.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். எதிர்கால நலன் கருதி இன்று சிறப்பாக திட்டமிடுவீர்கள்.

இன்று எந்தவிதமான ஆரோக்கியப் பிரச்சினையும் காணப்படாது. இன்று முழுவதும் உற்சாகமாக இருப்பீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பல வாய்ப்புகள் கிடைக்கலாம். அதனை முழுவதுமாக நன்கு பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

இன்று அர்ப்பணிப்புடன், உங்கள் முயற்சி அனைத்தையும் செலுத்தி சிறப்பாக பணியாற்றுவீர்கள். கடினமான பணிகளையும் எளிதாக முடிக்கும் புரிந்துணர்வு உங்களிடம் காணப்படும்.

உங்கள் மனதில் அன்பு உணர்வு பொங்கிப் பெருகும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று நிதி வளர்ச்சி சமூகமாக இருக்கும். உங்கள் குடும்ப நலனுக்காக பணம் செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். வலிமையுடன் காணப்படுவீர்கள்.




இன்றைய அன்றாட நடவடிக்கைகளில் எச்சரிக்கையான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். இன்று வளர்ச்சிக்கு அனுகூலமான நாள் அல்ல.

உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதை கடினமாக கருதுவீர்கள். உங்கள் பணிகளில் தாமதம் காணப்படும். சிறப்பாக பணியாற்ற திட்டமிட்டு பணியாற்றுங்கள்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படாது. நல்லுறவைப் பராமரிப்பதில் தான் உறவின் நிலை சார்ந்துள்ளது. இதன் மூலம் இருவரிடையே உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

குடும்பத்திற்காக தேவையற்ற செலவு ஏற்பட்டு பணம் வீணாகலாம்.




இன்று சமநிலையான நாளாக இருக்காது. சில சூழ்நிலைகளை சமாளிப்பதன் மூலம் விஷயங்களை நன்கு புரிந்து கொள்ள இயலும். உங்களுக்கு இழப்புகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் மேலதிகாரிகளுடனான உறவு நல்லுறவாக இருக்காது. மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவதை தவிர்த்திடுங்கள். அவர் சொல்வதைக் கேளுங்கள். இதனால் இருவரிடையே அன்பும் நல்லுறவும் வளரும்.

இன்று பண வரவு அதிகமாக இருக்காது. பணத்தை சேமிக்க வேண்டும். பணத்தை பாதுகாப்பதன் மூலம் இழப்பை தடுக்கலாம்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. கால் வலி உங்களுக்கு கவலை அளிக்கும்.




உங்களை மகிழ்ச்சியாக வைத்திருப்பதன் மூலம் நீங்கள் பிரச்சினைகளை குறைக்கலாம். கோவிலுக்கு செல்வதன் மூலம் ஆறுதலும் நிம்மதியும் கிடைக்கும்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் காணப்படும். எனவே பணிகளை திட்டமிட்டு ஒழுங்கு படுத்திக் கொள்வது சிறந்தது.

நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். உங்கள் துணையுடன் கோபமாக நடந்து கொள்வீர்கள். உங்களிடம் மகிழ்ச்சியான மன நிலை காணப்படாது. இதனால் இருவரிடையே முரண்பாடு ஏற்படும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்ய திட்டமிட வேண்டும்.

கண் தொற்று பாதிப்பு காணப்படலாம்.




பிறருடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும். இல்லையெனில் நற்பலன்கள் தாமதமாக விளையும். நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும்.

பணியைப் பொறுத்த வரை கூடுதல் முயற்சி எடுக்க வேண்டும். பணி சம்பந்தமான பயணம் மேற்கொள்ள நேரும்.

உங்கள் துணையுடன் தேவையற்ற வாக்குவாதங்கள் நடத்துவீர்கள்.எனவே பேசும் போது கட்டுப்பாடு அவசியம்.

இன்று செழிப்பான நிதிநிலைக்கு உகந்த நாள் அல்ல. இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். உங்கள் சம்பாதிக்கும் திறன் குறைந்து காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.




நீங்கள் சிறப்பாக செயல் புரிந்து வெற்றி பெறுவீர்கள். உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்வீர்கள்.

பணியிடத்தில் நன்மை விளையும். உங்கள் திறமையை நிரூபிக்க பல வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் கருத்தை உங்கள் துணையிடம் வெளிப்படையாக கூறுவீர்கள். உங்கள் நம்பிக்கை உணர்வின் மூலம் இது சாத்தியம் ஆகும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் சேமிப்பு பழக்கத்தை மேற்கொள்வீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். திருப்திகரமான, நகைச்சுவைபூர்வமான மனநிலை காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்களின் வளர்ச்சி மற்றும் வெற்றி குறித்த கவலை காணப்படும். உங்களை நீங்களே ஊக்கப்படுத்திக் கொண்டு முன்னேற விரும்புவீர்கள். இது உங்களுக்கு திருப்திகரமான உணர்வை அளிக்கும்.

பணியிடத்தில் சவால்கள் காணப்பட்டாலும் நீங்கள் வெற்றி பெறுவீர்கள். மகிழ்ச்சி அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் ஒத்துப் போக முடியாத வகையில் கருத்து வேறுபாடு ஏற்படும். எனவே அவருடன் அமர்ந்து அதனை தீர்த்துக் கொள்வது சிறந்தது.

இன்று செலவுகள் அதிகமாகக் காணப்படும். உங்கள் செலவுகளை கட்டுப்படுத்தாவிட்டால் அதிக செலவுகளை சமாளிக்க இயலாது.

# இன்றைய ராசி பலன்கள்- 14.01.2026




வெளியிடங்களுக்கு சென்று வருவதன் மூலம் மகிழ்ச்சி அடைவீர்கள். உங்கள் செயல்களில் உணர்ச்சி வசப்படுவதைவிட யதார்த்தமாக இருப்பது நல்லது. இன்று அமைதியாக இருக்க வேண்டும்.

எப்பொழுதும் போல பணியாற்றினால் பணியிடத்தில் வெற்றி பெற இயலாது. சிறப்பாக பணியாற்ற உங்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். பணியில் தவறுகள் நேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்தும் மனநிலையில் இருக்க மாட்டீர்கள். உங்கள் துணையிடம் நகைச்சுவை அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று செலவுகள் அதிகமாகக் காணப்படும். உங்கள் செலவுகளை கட்டுப்படுத்தாவிட்டால் அதிக செலவுகளை சமாளிக்க இயலாது.




இன்று அதைரியம் உங்கள் வளர்ச்சியை பாதிக்கும். மனதில் நம்பிக்கையும் உறுதியும் கொள்ளுங்கள். எதிர்மறை எண்ணங்களை நீக்கி நேர்மறை எண்ணங்களை மேற்கொள்ளுங்கள்.

பணியிடச் சூழல் மகிழ்சிகரமாக இருக்காது. திட்டமிட்டு பணியாற்றுவது நல்லது.

மனக்குழப்பம் காரணமாக கோபமான மனநிலையை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனால் இருவரிடையே மகிழ்ச்சி பாதிக்கப்படும்.

இன்று தேவையற்ற செலவுகள் செய்ய நேரும். இது உங்களுக்கு சுமையாக தெரியும்.

பதற்றம் காரணமாக கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்களுக்கு பயன் தரும் நல்ல மாற்றங்களைக் காணலாம். உங்கள் நகைச்சுவை போக்கு காரணமாக நன்மை விளையும்.

வேலை மாற்றம் அல்லது அது தொடர்பான பயணம் காணப்படுகின்றது. உங்கள் முயற்சிக்கு நல்ல பலன் கிடைக்கும்.

உங்களின் மகிழ்ச்சியான நகைச்சுவையான உணர்வை உங்கள் துணையிடம் வெளிப்படுத்தி நல்லுறவை பராமரிப்பீர்கள். உங்கள் துணையும் மகிழ்ந்து பதிலுக்கு அன்பை செலுத்துவார்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். வங்கியில் சிறந்த பண இருப்பை பராமரிப்பீர்கள். .இன்று ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது. ஆரோக்கியத்தில் பெரிய குறைபாடு காணப்படாது.




உங்கள் செயல்களை விரைந்து ஆற்றுவீர்கள். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு முன்னேற்றகரமான பலன்களை அளிக்கும்.

உங்கள் பணியின் மூலம் நற்பெயர் பெறுவீர்கள். உங்களின் சுய முயற்சி மற்றும் புத்திசாலித்தனம் காரணமாக இது சாத்தியம் ஆகும்.

உங்கள் துணையிடம் நம்பிக்கையான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். உங்கள் துணை கைபேசி வாங்கித் தரக் கோருவார். அவரது தேவையை பூர்த்தி செய்வீர்கள்.

நிதி நிலைமை மகிழ்ச்சி தரும் வகையில் செழிப்பாக இருக்கும். இன்று கணிசமான தொகை லாபமாகக் கிடைக்கும்.பொதுவாக இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். மகிழ்ச்சி மற்றும் மன உறுதி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




# வவுனியாவில் போக்குவரத்துப் பொலிஸாரின் செயற்பாடு குறித்து மக்கள் விசனம் தெரிவிப்பு

(வவுனியா நிருபர்)

வவுனியா நீதிமன்ற நடவடிக்கைகள் இடம்பெறும் சமயங்களில் நீதிமன்றம் முன்பாக விபத்துக்கள் ஏற்படும் வகையில் போக்குவரத்துப் பொலிஸார் திடீர் சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வவுனியா நீதிமன்றம் முன்பாக கடமையில் நிற்கும் போக்குவரத்துப் பொலிஸார், நீதிமன்ற நடவடிக்கைக்காக அப் பகுதியில் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள நிலையில் திடீரென வாகனங்களை மறித்து சோதனை செய்வதுடன், தாம் நிற்கும் திசைக்கு எதிர் திசையில் வரும் வாகனங்களையும் திடீரென வீதியை குறிக்கிட்டு வாகனத்தை மறித்து அவர்களது ஆவணங்களை சோதனை செய்து வருகின்றார்.

ஆவணங்களை பொலிஸார் சோதனை செய்வது சரியானதெனினும், அந்தப் பகுதியில் சன நெரிசலுக்கு மத்தியில் வாகனம் செல்லும் போது திடீரென வாகனங்களை மறிப்பதால் விபத்துக்கள் ஏற்படும் அபாயமுள்ளது.

எனவே, இது தொடர்பில் வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தலைவர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் பொது மக்கள் கோரியுள்ளனர்.